---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பேருவளை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பேருவளை பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய

ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

1.6.1 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.22(ஊ) மற்றும் 3.23 ஆம் பந்திகளின் பிரகாரம் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட மீதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஆ)	நியமத்தின் 03 அத்தியாயத்தின் 3.27 முதல் 3.32 இற்கு இடையிலான பந்திகளுக்கு இணங்கும் வகையில் மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ)	நியமத்தின் 6 ஆம் அத்தியாயத்தின் 6.15 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் அடிப்படையின் கீழ் நிலையான சொத்துக்கள் குறைந்து செல்லும் மீதி முறையின் பிரகாரம் பெறுமானத்தேய்வு செய்யப்ப்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வு கணிப்படப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.
(ஈ)	நியமத்தின் 9 ஆம் அத்தியாயத்தின் 9.9 ஆம் பந்தியின் பிரகாரம் மூலதன மாணிய செலவினங்களுக்காக அரசாங்கத்தில் இருந்து மேற்கொள்ளப்பட்ட கையளித்தல் ஆரம்ப ரீதியல் ஏனைய விரிவான வருமான கூற்றில் இனங்காண வேண்டியிருந்ததுடன் ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்பட்டு பெறுமதி ஏனைய விரிவான வருமானத்தில் குறைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் இனங்காணப்பட்டமை விரிவான வருமானக் கூற்றிலோ அல்லது அதன் குறிப்பு இலக்கம் 05 மற்றும் 10 இன் மூலமோ வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	மேற்படி	மேற்படி

1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்படாத ரூபா 500,000 பெறுமதியான 02 டெக்டர் வண்டிகள் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரித்து ஒன்று இன்றிய நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யாது இருந்ததல் வேண்டும்
(ஆ)	மூலதன மானியங்களைக் கணக்கு வைக்கும் போது பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட பெறுமதிக்கு சமமான அளவு ஒன்று வருமானத்திற்கு எதிராக இனங்காண வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் ரூபா 61,721,682 புனரமைப்பு அல்லாத செலவினங்களுக்காக அரசாங்கத்தில் இருந்து கிடைத்த மாற்றல்களாக காண்பிக்கப்பட்டதுடன் விரிவான வருமானத்தின் மிகையில் இனங்காணப்பட்ட மூலதன செலவின மானியம் ஆக ரூபா 2,462,392 காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 இன் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மூலதன மானியம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.

(இ)	02 வருடங்களுக்கு ஒரு தடவை முதரிச்சி அடைகின்ற ரூபா 575,000 மற்றும் 100,000 ஆன இலங்கை வங்கியின் நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டிற்குரிய வட்டி இனங்கண்டு கணக்கீடு செய்யப் பட்டிருக்கவில்லை.	மேற்படி	ஆண்டிற்குரிய வருமானம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும்.
(ஈ)	நிலையான சொத்துக்களுக்கு உரிய திரண்ட பெறுமானத் தேய்வுக்காக பொதுப் பேரேட்டில் தனித்தனியாக பெறுமானத் தேய்வு ஒதுக்கம் கணக்கு பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் நிலையான சொத்துக்களுக்கு உரிய திரண்ட பெறுமானத் தேய்வு, ஒதுக்கீடுகள் ஏற்பாடுகள் கணக்கில் சீராக்கப்பட்டிருந்தது.	மேற்படி	கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.
(உ)	03 நடைமுறை கணக்குகளுக்காக வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கும் போது காசேட்டின் பிரகாரம் மீதிக்கு பதிலாக வேறு ஒரு பெறுமதி பயன்படுத்தப்பட்டது.	மேற்படி	வங்கி இணக்க கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 05 கணக்கு விடயங்களின் மீதிகளுக்கும், அவற்றுக்கு உரிய பட்டோலைகளில் காண்பிக்கப்படுகின்ற மீதிகளுக்கும் இடையே இணக்கம் செய்யப்படாத ரூபா 3,267,919 வேறுபாடு இனங்கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வேறுபாடுகளுக்கு உரிய காரணங்களை கண்டறிந்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமானங்களுடனான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2011 பெப்ரவரி 09 ஆம் திகதிய இலக்கம் 13/2008(iv) என்ற அரச நிர்வாக சுற்றறிக்கை	எரிபொருள் படி பெற்றுக் கொள்வதற்கு உரித்து அல்லாத 12 கள உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் தற்காலிகமாக சேர்க்கப்பட்ட உத்தியோகத்தருக்கும் கூட்டுப்பெறுமதி ரூபா 666,076 ஆன எரிபொருள் லீற்றர் 1,927 வழங்கப்பட்டிருந்தது.	உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து உதவி கோரப்பட்டுள்ளதுடன் 2025 சனவரி மாதம் முதல் எரிபொருள் படி செலுத்ததல் நிறுத்தப்பட்டுள்ளது.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 53,226,523 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,048,882 ஆகும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

		2024				2023			
	வருமானமான மூலம்	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை	மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	ஆதன வரியும் வரியும்	29,069,868	29,317,455	32,967,628	12,866,227	25,918,429	25,600,161	34,037,739	15,835,000
ii.	வாடகை	20,197,646	21,704,530	23,401,372	1,636,251	23,255,552	19,086,953	17,124,743	3,848,205
iii.	அனுமதிப் பத்திரக் கட்டணம்	712,000	898,979	985,979	25,000	4,133,000	4,233,205	4,184,806	793,400
		49,979,514	51,920,964	57,354,979	14,527,478	53,306,981	48,920,319	55,347,288	20,476,605

2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	**வீதவரியும் வரியும்** மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் வீதவரி மற்றும் வரியின் நிலுவை ரூபா 15,835,000 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 5,782,115 அதாவது 36 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	எஞ்சிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிலுவை வருமானத்தை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

(ஆ)	**கடை வாடகை**		
(i)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கடை வாடகை நிலுவை ரூபா 1,834,324 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 823,986 அதாவது 44 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை.	நிலுவையை அறவிடுவதற்கோ அல்லது வழக்கு தொடர்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(ii)	04 வருடங்கள் முதல் காணப்படுகின்ற நிலுவை கடை வாடகை ரூபா 689,762 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை.	ரூபா 18,600 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் வியாபார நிலையங்களில் இருந்து விட்டுச் சென்றிருந்தமையால் மிகுதித் தொகை பதிவேடுகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	மேற்படி
(இ)	**ஏனைய வருமானம்**		
	மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும், ஏனைய அதிகாரத் தரப்பினரிடம் இருந்தும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 11,452,577 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 148,823,645 ஆகும்	பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்திற்கான பட்டோலைகள் தயாரிக்குமாறு களுத்துறை காணிப்பதிவாளர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	மேற்படி

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற வேண்டிய 09 வியாபர நிலையங்கள் அந்த அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளாது இருக்கும் போது வியாபார நடவடிக்கைகள் நடாத்திச் செல்வதற்கு சபையினால் வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெறாத நிறுவனங்களுக்காக வியாபார அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகளை காண்பித்து பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் பிரகாரம் உபவிதிகள் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.	உபவிதிகளை தயாரிப்பதற்காக உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	சபையின் நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான புதிய உபவிதிகளை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும்.

(ஆ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149 ஆம் பிரிவில் சுற்றுலா அபிவிருத்தி சட்டத்தின் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற ஹொட்டல் தொடர்பாக அனுமதிப் பத்திரக் கட்டணமாக வருமானம் ஒன்று அறவிட வேண்டிய சதவீதம் மற்றும் வருடாந்த வருமானத்தின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் திட்ட முறைமை ஒன்று காண்பிக்கப்படாது இருந்தமையால் எதிர்காலத்தில் வருமானத்தை அறவிடும் போது ஏற்படக் கூடிய சர்ச்சைக்குரிய தன்மைகளை தடுப்பதற்காக பிரதேச சபைகள் சட்டத்தின் 223 ஆம் பிரிவின் கீழ் ஹொட்டல் தொடர்பான வருமானங்களை அறவிடுவதற்குரிய உபவிதி ஒன்றை அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி நிறுவனத்தில் இருந்து ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	மேற்படி

3.2 இனங்காணப்பட்ட நட்டம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2024 யூலை 25 ஆந் திகதிய இலக்கம் எல்ஜீடீ/10எப்/02/கேஏஎல்/2024 என்ற உள்ளூராட்சி ஆணையாளரின் கடிதத்தின் மூலம் சபையின் உத்தியோகத்தரின் செயற்திறன்னின்மையின் அடிப்படையில் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட ரூபா 561,147 நிதி நட்டத்தை அதற்குப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் ஆண்டின் இறுதி வரையிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பரிசோதனைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	தொடர்புடைய கடிதத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	2023 ஆம் ஆண்டிற்காக திட்டமிடல் குழு நடைபெறும் போது ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் 05 உப அலுவலகங்களில் விண்ணப்பப்பத்திரங்கள் கலந்துரையாடப் பட்டிருந்த போதிலும் அதற்காக கையொப்ப பதிவேடு 05 தயாரிக்கப்பட்டு 05 கூட்டங்கள் நடாத்தப்பட்டதாகக் கருதி படிகள் செலுத்தியமையால் மேலதிக செலுத்துதல்களுக்காக சபை நிதியத்திற்கு ஏற்பட்ட ரூபா 486,000 நட்டத்தில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 133,500 மாத்திரம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும் செலுத்த வேண்டிய தரப்பினருக்கு	ஓய்வூதியம் தயாரிக்கும் போதும் மற்றும் ஏனைய நிறுவனங்களில் இருந்து அறவிட்டு அனுப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.	சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை விரைவாக அறவிடல் வேண்டும்.

	உரிய பணத்தை செலுத்தாமைக்கு எதிராக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(இ)	பிரதேச சபையின் பதவிகளில் ஈடுபட்டிருக்கின்ற 07 உத்தியோகத்தர்களுக்கு எதிராக பிரதேச சபைகள் விதி இலக்கம் 178(10) இன் பிரகாரம் விசேட ஆலோசனை பெற்றுக் கொள்ளப்படாமல் சரியான மாதிரிகள் தயாரிக்காமல் மற்றும் சரியான தொழில் நுட்ப மதிப்பீடு இன்றி 2006 செப்தெம்பர் 22 ஆந் திகதி ரூபா 869,500 முற்பணம் செலுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த தார் சூடாக்கும் இயந்திரம் 2006 நவம்பர் 17 ஆந் திகதி முதல் செயலிழந்து இருந்தது. அந்த இயந்திரத்திற்கு செலுத்தப்பட்ட முற்பணத் தொகைக்காக பெறப்பட்ட வங்கி பிணை மாற்றப்பட்டு பணத்தைப் பெற்றுக் கொள்ளாமையினால் சபை நிதியத்திற்கு ரூபா 869,500 நட்டம் ஏற்பட்டதாக கருதி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 172(3) உப பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மிகைக் கட்டண சான்றிதழ் மூலம் மிகைக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உள்ளூராட்சி ஆணையாளரால் மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது இருந்ததுடன் பிரதேச சபையும் அது தொடர்பாக மீள் நினைவூட்டல் அனுப்பி சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2025 ஏப்ரல் 08 ஆந் திகதி உரிய தரப்பினருக்கு கொடுப்பனவு செலுத்துமாறு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.	மிகைக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	தர்கா நகர உப அலுவலகம் அமைந்துள்ள 02 ஏக்கர் 01 றூட் 10.72 பேர்ச் அளவான ரூபா 30,000,000 பெறுமதியான காணியில் சமுர்த்தி வங்கி மற்றும் தபால் அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டதுடன் சபை வளவில் வேறு நிறுவனங்களால் கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் அல்லது உடன்படிக்கை சபையிடம் காணப்படவில்லை. மொத்த காணியின் பெறுமதி காண்பிக்கப்பட்டதுடன் இவ்வாறு சபைக்கு சொந்தமான ஆதனங்களில் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பாக	சமுர்த்தி வங்கி மற்றும் தபால் அலுவலகம் அனுமதியற்ற நிர்மாணங்களா என தெளிவான பதில் வழங்குவதற்கு முடியாது உள்ளது.	சபைக்குரிய ஆதனங்களை பாதுகாப்பது தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

	சபையினால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் அந்த நிறுவனங்களில் இருந்து ரூபா 4,671 மற்றும் ரூபா 11,677 வீதம் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது.		
(ஆ)	தர்கா நகர் உபஅலுவலக வளவில் அமைந்துள் இரண்டு மாடிக் கட்டிடத்தின் மேல் மாடியில் உடன்படிக்கை இன்றி பொலிஸ் காவல் நிலையம் ஒன்றாக இலங்கை பொலிசினால் பயன்படுத்தப்படுவதுடன் அந்த கட்டிடத்திற்குரிய மீளாய்வாண்டிற்கான நீர்ப் பட்டியலாக கூட்டுமொத்தமாக ரூபா 108,500 சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.	2025 மே 31 ஆந் திகதி முதல் நீர்வழங்கலை துண்டிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சபைக்குரிய ஆதனங்கள் முறையாக வாடகைக்கு வழங்கப்படல் வேண்டும்.

3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2020 திசெம்பர் 03 ஆந் திகதிய LGD/13/2016(i) என்ற உள்ளுராட்சித் திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த கடை வாடகை ஒவ்வொரு 03 வருடங்களுக்கும் ஒரு தடவை அரசாங்கத்தின் மதிப்பீட்டானரின் பட்டயம் பெற்ற மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் மீள் திருத்தம் செய்ய வேண்டியிருந்த போதிலும் அலுத்கம வாராந்த சந்தையில் 09 மரக்கறிக் கடைகள் மற்றும் 09 சில்லறைக் கடைகளுக்காக 2015 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் புதிய மதிப்பீட்டு அறிக்கையை பெற்று தற்போது வழங்கப்பட்டுள்ள கடைகளின் வாடகையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
	பிரதான அலுவலகம் மற்றும் உப அலுவலகத்திற்காக தேவையான தேவையான 17 மென்பொருள் முறைமைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2018 மார்ச் மாதம் சபையினால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் உடன்படிக்கை செய்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.		
(அ)	பேருவளை பிரதேச சபையினால் அந்த நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்ட உடன் படிக்கையின் நிபந்தனை 04 இன் பிரகாரம் உடன்படிக்கை செய்யும் போது மென்பொருள்	எதிர்காலத்தில் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும்.	உடன்படிக்கைக்கு முரணாக செலுத்துதல் தொடர்பாக

	முறைமையின் பெறுமதியில் 50 சதவீதம், கணனி முறைமையில் ஸ்தாபித்த பின்னர் 25 சதவீதம், மிகுதி 25 சதவீதம் ஊழியர் பயிற்சியின் பின்னரும் செலுத்துதல் வேண்டும். எனினும் ரூபா 495,000 ஆன சம்பளம் முகாமைத்துவ முறைமை மற்றும் ரூபா 275,000 ஆன இணையதளம் ஊடாக கட்டணம் செலுத்தி ஒதுக்கும் இணையதள முறைமைக்கு 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கணனி முறைமையில் ஸ்தாபிக்கப்படாது இருந்த போதிலும் ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் மற்றும் பயிற்சியின் பின்னர் செலுத்த வேண்டிய 50 சதவீதமான ரூபா 385,000 தொகை 2018 மார்ச் 21 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது.		நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	நிலுவை வருமானம் முகாமைத்துவ முறைமைக்காக ரூபா 385,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் நிலுவைக் கடை வாடகை பகுப்பாய்வின் போது முகாமைத்துவ தீர்மானத்தை எடுப்பதற்கு தேவையான அறிக்கை அந்த கணனி முறைமையின் ஊடாக பெற்றுக் கொள்வதற்கான இயலுமை காணப்படவில்லை.	கடை வாடகை காலப் பகுப்பாய்வு அறிக்கை பெற்றுக் கொள்வதற்கு நெக்பா நிறுவனத்தில் கோரப்பட்டுள்ளது.	செலவிடப்பட்ட தொகைக்கு சமமான நலன்கள் பெறக் கூடிய வகையில் முறைமை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும்.
(இ)	சகல கணக்குகள் முகாமைத்துவ முறைமை, மனிதவள முகாமைத்துவ முறைமை, இருப்பு களஞ்சிய முகாமைத்துவ முறைமைக்காக முறையே ரூபா 495,000 தொகை, ரூபா 295,000 மற்றும் ரூபா 695,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த மென் பொருள் சபையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.	உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கும், பிரதான அலுவலகங்கள் மற்றும் உப அலுவலகங்களில் வலையமைப்பை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	முறைமையினை வினைத்திறனாக பயன்படுத்துதல் வேண்டும்.
(ஈ)	கேள்வி நிபந்தனை இலக்கம் 08 இன் பிரகாரம் முறைமை ஒன்றுக்கு ஒன்று வெவ்வேறாக செயற்படுத்தக் கூடிய இயலுமை போன்று தனிப்பட்ட முறைமையாகவும் செயற்படுத்தும் இயலுமை காணப்படல் வேண்டும். எனினும் ஆதனவரி மற்றும் ஏனைய வரி வருமானம் முகாமைத்துவ முறைமையில் உப அலுவலகத்திற்காக தனித்தனியாக ஸ்தாபிக்கப்பட்ட போதிலும் சபையின் ஒட்டுமொத்த வருமான முகாமைத்துவத்திற்கு உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக உப அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகத்திற்கு இடையே முறைமையின் இணைப்பை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் மேற்படி வலையமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்	

3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	2018 ஆம் ஆண்டின் பின்னர் ஓட்ட குறிப்புக்கள் எழுதப்படாத குபோட்டா கை டெக்டர் தனியார் நிறுவனத்திற்கு பழுது பார்த்தலுக்கு வழங்கப்பட்ட திகதி மற்றும் கையொப்பம் இன்றி சம்பவத் திரட்டுப் புத்தகம் காண்பிக்கப்பட்ட போதிலும் பராமரிப்பு தொடர்பாக கராஜ் உடன் பரிமாற்றப்பட்ட எந்த ஒரு ஆவணமும் சபையிடம் காணப்படாது இருந்ததுடன் நிலையான சொத்துப் பதிவேட்டிலும் வாகனத்தின் பெறுமதி உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. கராஜ் இல் அந்த வாகனத்தின் துணைப்பாகங்கள் கழற்றி போடப்பட்டதுடன் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் வாகனத்தை பழுது பார்த்து சபைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.	சொத்துக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்படாமை தொடர்பாக குறித்துரைத்த பதில் ஒன்று வழங்கமுடியாது இருந்ததுடன் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	மேல் மாகாண உள்ளூராட்சி செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	மேல் மாகாண உள்ளூராட்சி அபிவிருத்தி அமைச்சில் இருந்து நன்கொடையாக கிடைக்கப் பெற்ற கரையோர சுத்திகரிப்பு வாகனம் 2017 ஒக்தோபர் 13 ஆந் திகதி முதல் ஓட்ட நிலையில் காணப்பட வில்லை.	சபைக்கு நிதி வலு ஒன்று காணப்படாது இருந்தமையால் பழுது பார்த்தல் காலந் தாழ்த்தப்பட்டிருந்தது.	நிதியத்தை பெற்று பழுது பார்த்தல் நடவடிக்கைகளை துரிதப் படுத்துதல் வேண்டும்.
(இ)	சபை பயன்படுத்துகின்ற 06 வாகனங்களை கையேற்பதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	தற்போது ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் அந்த பிரச்சனைகள் தீர்க்கப்படும்.	வாகனங்களை உரிய பிரகாரம் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஈ)	2020 ஆகஸ்ட் 27 ஆம் திகதி இலக்கம் ஜீடீ/தி.சுற்/2020 என்ற உள்ளூராட்சி திணைக்கள சுற்றறிக்கையின் அட்டவணை இலக்கம் 16 இல் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்கு உரிய படிவத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல், அகற்றுதல் மற்றும் சீராக்குதல், கிரயம் மற்றும் பெறுமானத் தேய்வு இன் கீழ் தெளிவாக காண்பிக்கப்படாது இருந்ததுடன் அட்டவணை இலக்கம் 10 இன் கீழ் மூலதன செலவினப் படிகளின் பெறுமதி படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	எதிர்வரும் ஆண்டுகளில் படிவத்தின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.7 பெறுகைகள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
தர்கா நகரத்தில் நூலகத்திற்காக ரூபா 6,971,350 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யும் போது அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக அரச மரக் கூட்டுத்தாபனத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் நூலகத்தில் இருந்து அகற்றப்பட்ட தளபாடங்கள் மற்றும உபகரணங்கள் உரிய பிரகாரம் கையளிக்கப்பட்டிருக்க வில்லை.	பழைய தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் முறையாக கையேற்கப்பட்டமைக்கோ அல்லது கையளிக்கப்பட்டமைக்கான சான்றுகளோ காணப்பட வில்லை.	அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் கொள்வன செய்ய வேண்டி இருந்ததுடன் அகற்றப்பட்ட பொருட்கள் உரிய பிரகாரம் களஞ்சியத்திற்கு கையளிக்கப்படல் வேண்டும்.

3.8 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	முறையான உடன்படிக்கை கைச்சாத்திடாமல் கழிவுப் பொருட்கள் அகற்றுவதற்காக மண் வெட்டும் ஒப்பந்தம் கழிவுப் பொருட்களை மூடுவதற்காக மண் வெட்டும் ஒப்பந்தம் வழங்குனருக்கு வழங்க வேண்டி இருந்ததுடன் வழங்கப்பட்ட மண் பௌதீக ரீதியில் பரீட்சித்து அளவிடப்படாமல் மண் வெட்டவதற்காக வாகனம் வருகை தந்த தடைவைகளின் கணிப்பின் எண்ணிக்கையின் பிரகாரம் கணிப்பிடப்பட்டு மீளாய்வாண்டின் சனவரி முதல் யூலை வரை வழங்குனருக்கும ரூபா 5,821,000 செலுத்தப்பட்டிருந்தது.	வேலை அத்தியட்சகரினால் பரீட்சித்துக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.	வெளித்தரப்பினருக்கு ஒப்பந்தத்தை கையளிக்கும் போது உடன்படிக்கை செய்ய வேண்டி இருந்ததுடன் கொடுப்பனவு செய்தல் உரிய மேற்பார்வை ஒன்றும் மற்றும் நிர்வாக முறைமை ஒன்றும் அறிமுகப்படுத்துல் வேண்டும்.
(ஆ)	பேருவளை, மொறகொல்ல கடற்கரைப் பிரதேசத்தில் மின் கம்பங்களை அமைத்தல் மற்றும் தொகுதி அல்லது கிளஸ்டர் மின் வயர்களை இடுவதற்காக ரூபா 24,985,879 தொகையும் அந்த கடற்கரையில் மின்விளக்குகளால் அழகு படுத்துவதற்காக ரூபா 2,802,244 தொகையுமாக சபைக்கு கிடைக்கப் பெற்ற மாகாண அபிவிருத்தி மானியம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.		
(i)	கரையோரப் பிரதேசத்தில் விளக்குகள் இட்டு அலங்கரிக்கும் செயற்திட்டத்திற்காக சபையினால் ரூபா 6,200,000 கிரய மதிப்பீடு ஒன்று தயாரித்து நிதியேற்பாடு	நேர் ஊழியம் அடிப்படையில் நிறை வேற்றப்பட்டமையால் கிரயம் சேமிக்கப்பட்டிருந்தது.	செயற்திட்டத்திற்காக மிகை மதிப்பீடு தயாரிக்காது இருத்தல் வேண்டும்.

	அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் நேர் ஊழிய அடிப்படையில் அந்தப் பணிகள் நிறைவேற்றியமையால் ரூபா 3,397,756 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.		
(ii)	கடற்கரைப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட மின்சார விளக்கு முறைமை 2024 யூலை 13 ஆந் திகதி திறக்கப்பட்டதுடன் அதனைத் திறக்கும் விழாவிற்காக அரசியல் அதிகாரரிகளின் பெயர் மற்றும் நிழற்படங்களை உள்ளடக்கிய 04 பெனர்கள் தயாரிப்பதற்காக சபையினால் ரூபா 150,000 செலவிடப்பட்டிருந்தது.	சபைக்கு பனர் மதிப்பீட்டில் பனருக்காக செலவினம் உள்ளடக்கப்படவில்லை.	சபை நிதியம் தேவையற்ற பணிகளுக்காக நிதியினை செலவிடாது இருத்தல் வேண்டும்.
(iii)	செயற்திட்டத்திற்காக இவ்வாறு கெணிசமான செலவினப் பொறுப்பு ஒன்றை செய்வதற்கு முன் அதன் மூலம் பெறப்படுகின்ற பொது மக்களின் நலன்கள் கவனத்தில் கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதன் மூலம் கிடைக்கின்ற பொது மக்கள் நலன்கள் காணப்படாதிருந்ததாகவும் கரையோரம் சார்ந்த ஹொட்டல்கள் அதன் மூலம் பயன் பெறக் கூடியதாக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது. எனினும் செயற்திட்டத்தின் நலன்களுக்கு உரிமை கோருகின்ற 07 ஹொட்டல்கள் 2020 ஆம் ஆண்டு முதல் சபை அனுமதிப் பத்திரக் கட்டணம் செலுத்தாமையால் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் சபைக்கு ஏற்பட்டிருந்தது.	சுற்றுலா பிரயாணிகளை கவருவதற்கும் மற்றும் கரையோர பிரதேசத்தில் வியாபார செயற்பாடுகளின் நலன்களுக்காவும் செயற்திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.	செயற்திட்டங்களின் நலன்கள் பொது மக்களுக்கு செல்வதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

3.9 மனிதவள முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
(அ)	ஆரம்ப நிலையில் 01 பதவிகள் வெற்றிடமாகக் காண்பிக்கப்பட்ட போதிலும் 2023 யூன் மாதம் முதல் சபைக்கு நியமிக்கப்பட்ட 30 தொழிலாளர்கள் 2023 யூன் முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஏனைய அரசாங்கத்தின் அலுவலகங்களில் சேவையாற்றி இருந்ததுடன் மீளாய்வாண்டிற்காக சம்பளமாக சபை நிதியத்தில் இருந்து ரூபா 17,388,000 செலுத்தப்பட்டிருந்தது.	2025 சனவரி 30 ஆந் திகதிய கடிதம் மூலம் அந்த ஊழியர்களை மீண்டும் சபைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	சபையின் பணிகளை மேற்கொள்ளாத ஊழியர்களுக்கு சபை நிதியத்தில் இருந்து சம்பளம் செலுத்த முடியாது.
(ஆ)	2022 ஆம் ஆண்டில் ஒய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் மற்றும் 2023 ஆம் ஆண்டில் ஓய்வு பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தர்களின் கடன்	2025 மார்ச் 10 ஆந் திகதி வரையில் ரூபா 210,200 அறவிடப்பட்டதுடன் மிகுதி தொகையை	உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தின் போது

மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 834,838 மற்றும் 2022 ஆம் ஆண்டில் சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 184,314 தொகைகளுக்கு இடையே எந்த ஒரு தொகையும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருக்க வில்லை.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஊழியர் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் ஏனைய நிலுவைக் கடன் தொகைகளை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளுராட்சி நிறுவனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 24 ஆந் திகதி இலக்கம் 2155/8 என்ற அதிவிசேட வர்த்தமானி மூலம் விதிக்கப்பட்ட மேல் மாகாண பிரதேச சபை நிதி நிர்வாகத்திற்கு உரிய கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான விதி இலக்கம் 08 இன் பிரகாரம் ஒர் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் அடுத்து வரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2025 மார்ச் 06 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் 2025.01.27 ஆந் திகதி இடம் மாற்றலாகிச் சென்றிருந்தார் என.	தொடர்புடைய சட்டம் மற்றும் வர்த்தமாணியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த பாதீட்டு நிதியேற்பாடு ரூபா 9,000,000 ஆன 11 வீதி பாராமரிப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்கள் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.	நிதியேற்பாடு போதியளவில் இல்லாமை மற்றும் தேர்தல் கால எல்லைக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது.	ஆண்டில் அமுல்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டங்கள் ஆண்டில் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

4.3 சுற்றாடல் பிரச்சினைகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரைகள்	பரிந்துரைகள்
பேருவளை பிரதேச சபையில் கணிசமாக சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக நீண்ட கால	கூட்டுப்பசளை தளத்தினதும் பேல் இயந்திரங்களினதும் இயலளவு போதியளவில்	கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்கு நீண்ட கால ஆக்கபூர்வமான வேலைத்

வேலைத் திட்ட முறைமை ஒன்று தயாரிக்கப்படாமையால் மீளாய்வாண்டில் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 10,864,350 செலவிடப்பட்டிருந்தது.	காணப்படாமையினால் வெளித்தரப்பினருடன் உடன்படிக்கை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.	திட்டம் ஒன்று தயாரிக்கப்படல் வேண்டும்.